தொழில்துறையில் கண்ணியமான வேலை வாய்ப்பை உருவாக்குவதாக அந்நிய முதலீடுகள் அமையவேண்டும்

சட்டப்பேரவையில் அ.சவுந்தரராசன் வலியுறுத்தல்

சென்னை, ஆக.17-

தொழில்துறையில் கண்ணியமான வேலை வாய்ப்பை உருவாக்குவதாக அந்நிய முதலீடுகள் அமையவேண்டும் என்றுசிபிஎம் சட்டமன்ற குழு தலைவர் சட்டப்பேரவையில் அ.சவுந்தரராசன் வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் புதனன்று (ஆக.17) எரிசக்தி,தொழில், ஊரக தொழில்கள் மானிய கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் அவர்பேசியது வருமாறு:

தொழில்துறைக்கு மின்சாரத்தை எந்த அளவிற்கு நாம் வழங்குகிறோமோ அந்த அளவிற்கு தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது முதலீடு செய்ய வரும் தொழில் முனைவோர் எதிர்பார்ப்பது தடையில்லா மின்சாரத்தைதான். தற்போது நாம் மின்சாரத்திற்காக தனியார் மின்நிலையங்களை அதிகமாக சார்ந்து இருக்க வேண்டிய நிலை உள்ளது. தனியார் மின் நிலையங்களுக்கு அனுமதி கொடுப்பதைப்பற்றி நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. அரசு மின்நிலையங்களில் அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்தவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை. இதில் அரசு தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும்.

எந்தெந்த மாநிலங்கள் தனியார் மின் நிலையத்தை சார்ந்து இருந்தனவோ அவை கடுமையான இழப்பிற்கும் நாசத்திற்கும் ஆளாகின என்பதுதான் நிதர்சனமான உண்மை. மகாராஷ்டிராவில் என்ரான் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் அம்மாநிலத்தையே ஏமாற்றி சென்றன. தனியார் மின் நிறுவனத்துடன் நாம் போடக்கூடிய ஒப்பந்தத்தில் மின்சாரம் வழங்காத காலத்தில் கூட பணம் அளிக்க வேண்டும் என்ற ஷரத்து உள்ளது. ஆகவே, இந்த விஷயத்தில் தமிழக அரசு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

தற்போதும் மாநிலத்தில் 2 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு மின் இணைப்பு தரவேண்டியுள்ளது. விவசாயத்தைப் பொறுத்த வரை 5 லட்சம் பேருக்கு மின் இணைப்பு தரவேண்டிவுள்ளது. இவர்கள் அனைவரும் மின் இணைப்புக்காக கடந்த 10 ஆண்டுகளாக காத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பை வழங்க வேண்டும்.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரை தொழிற்சாலைகள் இணை மின் உற்பத்தியை (கேப்டிவ் பவர்) செய்வதை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். இத்தகைய உற்பத்தியை கட்டாயப்படுத்துவதும் இதற்காக அவர்களுக்கு நாம் உதவுவதும் அவசியமாகும். அவர்களின் தேவைக்குப் போக நமது மின் தொகுப்பிற்கு மின்சாரத்தை தருவதை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும். இதற்காக தமிழக அரசு தனியாக திட்டமிட வேண்டும்.

பல தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் தூத்துக்குடியை சுற்றியே கவனம் செலுத்துகின்றன. அங்கு மட்டும் 20க்கும் மேற்பட்ட அனல் மின்நிலையங்கள் வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அருகருகே குறுகிய இடத்தில் இவ்வளவு மின்நிலையங்கள் அமைந்தால், காற்று கடுமையாக பாதிக்கப்பட்டு அதில் சல்பர் தன்மை அதிகமாகி மழை வந்தால் அமில மழை பொழியும் அளவிற்கு அங்குள்ள நிலைமை உள்ளது. இந்த மின் நிலையங்களைப் பரவலாக பல பகுதிகளில் அமைப்பதன் மூலம் சுற்றுச் சூழலை பாதுகாக்க முடியும்.

கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் மின்வாரியத்தின் தளவாட கிடங்குகள் முழுவதும் காலியாக இருந்தன. மின்சாரத்துறைக்கு எவையெல்லாம் அவசியமான பொருட்களோ அவை அங்கு இல்லை. சப்-ஸ்டேஷன் ஃபிட்டிங்ஸ் கிடையாது. பிரேக்கர் கிடையாது. 110 கி.வாட் மின் நிலையத்தில் பழுது ஏற்பட்டுவிட்டால் அதை சரி செய்வதற்குரிய தளவாடங்கள் இல்லை. கிளாம்ப் கிடையாது. பீஸ் வயர் கிடையாது. நாங்கள் புகார் செய்கிறபோது இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்தது.

**அமைச்சர் விஸ்வநாதன் (குறுக்கீடு):** கடந்த ஆட்சியில் மின்சாரத்துறையில் அன்றாடத் தேவைக்கான தளவாடங்கள் இல்லாமல் இருந்தது உண்மைதான். தற்போது அதிமுக அரசு பொறுப்பேற்றவுடன் தளவாடங்களை வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**அ. சவுந்தரராசன்:** தரமான மின்சாரம் என்பது நம்பத் தகுந்த மின்சாரமாகவும் இருக்க வேண்டும். மின்வாரியத்தில் உள்ள உயர் அதிகாரிகளை அரசு தீவிரமாக கண்காணிக்க வேண்டும். 3 ஆண்டுக்கு ஒருமுறை அவர்கள் இருக்கிற இடத்திலிருந்து பணிமாறுதல் செய்யப்பட வேண்டும். 6 ஆண்டுகள் 8 ஆண்டுகள் என்று ஒரே இடத்தில் அவர்கள் இருப்பதால் சின்டிகேட் அமைத் துக்கொண்டு செயல்பட ஏதுவாக அமைந்து விடுகிறது. இதில் அரசு கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2011 ஏப்ரல் மாதம் உயிரிழந்த ஊழியருக்கு 2011 ஆகஸ்டு மாதம் இடம் மாற்றம் கொடுக்கிற அளவிற்கு அதிகாரிகள் திறமையாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். (பேரவையில் சிரிப்பு அலை)

**அமைச்சர் விஸ்வநாதன் (குறுக்கீடு):** மின்வாரியத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றும்போது சில தவறுகள் நிகழ்வது இயல்புதான். இருப்பினும் தவறு செய்யும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**அ. சவுந்தரராசன்:** மின்வாரியத்தில் ஊழியர் பற்றாக்குறை என்பது மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். இதற்காக அடையாளம் காணப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். மின்வாரியத்தில் எந்தப் பிரச்சனைக்கு சென்றாலும் ஊழியர் பற்றாக்குறையை காரணமாக அதிகாரிகள் கூறுகிறார்கள். பகுதி நேர ஊழியர்களுக்கான நீதிமன்றத் தீர்ப்புகளை அமலாக்க வேண்டும். ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு காலப் பலன்கள் கூட கிடைக்கவில்லை. பல பிரச்சனைகள் இருந்தாலும் ஓய்வு பெற்றவர்களுக்கு

இதுபோன்ற அலைச்சலை மின்வாரியம் தரக்கூடாது.

தற்போதுள்ள தாராளமய சூழலில் தொழில்துறையை மீட்பதற்கு ஆளுநர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. முதலமைச்சரும் சில அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். தொழில் நமக்கு தேவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதே நேரத்தில் அந்தத் தொழில்கள் நமக்கு அதிக வேலை வாய்ப்புகளை தருவதாக இருக்க வேண்டும். ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்துள்ள தொழில் நிறுவனங்கள் கூட அதில் போடப்பட்ட மூலதனத்திற்கு ஏற்ற கண்ணியமான வேலையை உருவாக்கவில்லை. பல தனியார் தொழிற்சாலைகளில் ஒப்பந்த அடிப்படையில்தான் தொழிலாளர்கள் நியமிக்கப் படுகிறார்கள். பயிற்சித் தொழிலாளர்களும் சுரண்டப்படுகிறார்கள். எனவே, தனியார் ஆலைகள் சட்டதிட்டங் களுக்குட்பட்டு ஊழியர்களை பணியில் அமர்த்துவதோடு ஊதியத்தையும் வழங்குவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

தொழில்துறையும் தொழிலாளர் துறையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய துறைகளாகும். ஆனால், இந்த இரண்டு துறைகளும் அடிக்கடி மோதிக்கொள்ளும் சூழல்தான் உள்ளது. தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதோடு தொழிலாளர்களின் நலன்களிலும் தொழில்துறை கவனம் செலுத்த வேண்டும்.

போச்சம்பள்ளியில் உள்ள சூரியகாந்தி தொழிற்சாலை, கூட்டுறவு தேயிலை ஆலைகள், நூற்பாலைகள் என பல ஆலைகளில் பிரச்சனை ஏற்படும்போது தொழிலாளர் நலத்துறைதான் தலையிட வேண்டியுள்ளது. கைத்தறி, விசைத்தறி ஆகியவை நூல் விலை ஏற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பெரும் தொழில்கள் தொடங்கப்படுவதை நாம் ஊக்குவித்தாலும் பாரம்பரியத் தொழில்களை காப்பாற்றுவதும் மிக முக்கியக் கடமையாகும். நூல் விலை ஏற்றம் போன்ற இடு பொருட்களின் விலையை கட்டுக்குள் கொண்டு வர தொழில்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். நூல் விலை ஏற்றம் ஏற்படும்போது நூற்பாலைகளுக்கு அரசே பணம் வழங்கி வந்தது. அதை திடீரென்று அரசு நிறுத்திய காரணத்தால் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதில் அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் கடந்த ஆண்டு நன்கு லாபம் ஈட்டியுள்ளன. கனிம வளங்களை இன்னும் அதிகமாக பயன்படுத்த வேண்டியுள்ளது. அவை சார்ந்த தொழிற் சாலைகளை உருவாக்க வேண்டியுள்ளது. தூத்துக்குடியில் உள்ள டைட்டானியம் ஆலையைப்போன்று மாலிப்டினம் போன்ற கனிமங்களையும் பயன்படுத்தி தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். ஏற்கெனவே நாம் கண்டுபிடித்திருக்கின்ற கனிம வளங்களை மட்டுமல்லாமல் மேலும் இருக்கிற கிரானைட் கற்கள் வெட்டி எடுக்க சுரங்கங்களை அரசு தனியாருக்குக் கொடுத்துள்ளது. அவர்கள் ஒரு சதுர அடிக்கு அனுமதி பெற்றுக்கொண்டு 10 கன அடி வரை எடுத்துக்கொண்டு போகும் நிலைமைதான் தற்போது உள்ளது. இவற்றிலெல்லாம் அரசு தலையிட்டு இறுக்கி பிடித்தாலே அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். முடிந்தவரை இந்தக் கனிமங்களை அரசாங்கமே வெட்டி எடுக்க வேண்டும்.

**தொழில்துறை அமைச்சர் எஸ்.பி. வேலுமணி:** கடந்த ஆட்சிக்காலத்தில் கனிம வளங்களை வெட்டி எடுப்பதில் குறிப்பாக கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதில் பெருமளவு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. முன்னாள் முதலமைச்சரின் மகனும் மத்திய அமைச்சருமான மு.க. அழகிரி மற்றும் அவரது கூட்டாளிகள் நிறைய முறைகேடுகளை செய்துள்ளனர். அதிமுக அரசு பொறுப்பேற்றவுடன் இந்த முறைகேடுகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் கடந்த ஆட்சியில் தவறு இழைத்த மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட நிறுவனங்களின் உரிமங்கள் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளன.

**கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்):** 2006 முதல் 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை ஆட்சியில் இருந்த திமுக தலைவரின் குடும்பத்தினர் குறிப்பாக அவரது மூத்த மகன் மு.க. அழகிரி மற்றும் அவரது கூட்டாளிகள் மதுரையில் கிரானைட் கற்களை வெட்டி எடுத்ததில் ஒரு லட்சத்து 43ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஆதாயம் அடைந்துள்ளனர். தனியாருக்கு உரிமம் வழங்கி நான்கு ஐந்து கிராமங்களையே அழிக்கக்கூடிய அளவிற்கு கனிம வளங்களை வெட்டி எடுத்தனர். இது பல்வேறு பத்திரிகைகளில் செய்திகளும் வந்துள்ளன. இதுகுறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிடுமா? முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து அந்த தொகையை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் எஸ்.பி. வேலுமணி:** இதுகுறித்து முதலமைச்சர் கவனத்திற்கு வந்தவுடன் அந்தக் குவாரிகளின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன. எதிர்காலத்திலும் முறைகேடுகள் நடைபெற்றால் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதோடு அந்தக் குவாரிகள் செயல்பட தடைவிதிக்கப்படும்.

**அ. சவுந்தரராசன்:** தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் சிறு நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அந்நிறுவனத்தின் அறிக்கையைப் பார்த்தால் ஒதுக்கப்பட்ட கடன் தொகையை முழுவதும் வழங்கியதாக குறிப்பிடப்படவில்லை. கடன் வழங்க அவர்கள் ஒதுக்கிய அளவிற்கு சிறு நடுத்தர நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளவில்லை. இதில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கும் கடன் தொழில் முனைவோரை ஈர்க்கும் வகையில் கவர்ச்சியாக இல்லையா என்பதையும் பரிசீலிக்க வேண்டும். சிறுகுறு நடுத்தர தொழில் முனைவோர் இந்தக் கடனை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக வட்டியைக் குறைக்க வேண்டும். இந்தக் கடனை மென்கடனாக வழங்க வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

சிறுகுறு தொழிலில் ஈடுபடும் நிறுவனங்கள் தங்களது 30 விழுக்காடு உற்பத்திப்பொருட்களை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் அத்தொழில்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்த முடியும். சிறு நிறுவனங்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை பெரிய நிறுவனங்களுக்கு சப்ளை செய்யும்போது அந்தப் பொருட்களுக்கான விலை கடந்த 20 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ளது. ஒரு

நட்டின் விலை 7 பைசா என்று அவர்கள் நிர்ணயம் செய்தார்கள். 20 ஆண்டுகளாக அது மாறவே இல்லை. ஆனால், இந்த நட்டைக்கொண்டு உற்பத்தியாகும் மோட்டார் சைக்கிள் விலை 35 ஆயிரம் ரூபாயிலிருந்து இன்று 70 ஆயிரம் ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது. எனவே, சிறுகுறு உற்பத்தியாளர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு நியாயமான விலைக் கிடைப்பதை அரசு தலையிட்டு உறுதி செய்ய வேண்டும்.

பன்னாட்டு நிறுவனங்கள் தொழில்தொடங்க நமது மாநிலத்திற்கு வரும்பொழுது அவர்கள் தங்களுடன் உப நிறுவனங்களையும் அழைத்து வந்துவிடுகிறார்கள். அவர்கள் இங்குள்ள தொழில்களை சார்ந்திருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை நாம் செய்தால்தான் நமது தொழிலையும் மக்களையும் காப்பாற்ற முடியும்.

சிறுகுறு தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் அதில் உள்ள தொழில் முனைவோருக்கும் சேர்த்து ஒரு நலவாரியத்தை அரசு ஏற்படுத்த வேண்டும். மொத்த உற்பத்தியில் .3 சதவீதத்தை இந்த நலவாரிய நிதிக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். இதன் மூலம் அந்தத் தொழிலாளர்களின் நலனை நாம் பாதுகாக்க முடியும். இந்த நிறுவனங்களுக்கு மின்சார கட்டணத்தில் சலுகை வழங்குவதை 50 குதிரை சக்தி வரை நீட்டிக்க வேண்டும். நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு அதிக வேலை வாய்ப்புகளை தருவது சிறுகுறு தொழில்கள்தான். இதுமட்டுமல்ல அதிகமான சிறுகுறு தொழில் நிறுவனங்களைக் கொண்டுள்ள மாநிலமும் தமிழகம்தான். அதற்கு ஏற்ப ஊரக தொழில்துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

இவ்வாறு அ. சவுந்தரராசன் பேசினார்.

*தனியாரிடமிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரத்தை வாங்கமாட்டோம்*

*சட்டப்பேரவையில் அமைச்சர் விஸ்வநாதன் உறுதி*

*சென்னை, ஆக.17-*

தமிழ்நாட்டிற்கு தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தை தனியார் மின் நிலையங்களில் இருந்து வாங்கும் போது கூடுதல் தொகை கொடுத்து வாங்க மாட்டோம் என்று மின்சாரத்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் கூறினார்.

சட்டப்பேரவையில் புதனன்று (ஆக.17) எரிசக்தி,தொழில், ஊரக தொழில்கள் மானிய கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் சட்டமன்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அ.சவுந்தரராசன் பேசும் போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் இந்த உறுதியை அளித்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:

***அ.சவுந்தரராசன்:*** மின் உற்பத்தியில் மிகை மாநில மாக இருந்து மற்ற மாநிலங்களுக்கு மின்சாரத்தை தந்துகொண்டிருந்த தமிழ்நாடு கடந்த ஆட்சியாளர்களின் நிர்வாக சீர்கேட்டால் மற்ற மாநிலங்களிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நுகர்வு தேவை அதிகரித்தப் பின்னர் நமது மின் உற்பத்திக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியை 5 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து கணக்கிட அவர்கள் தவறியதன் விளைவு மின் பற்றாக்குறையால் இன்று நாம் தவிக்கிறோம். இவற்றை மிக வேகமாக நிறைவு செய்யும் நோக்கத்தில் தற்போதைய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளால் அடுத்த ஆண்டு டிசம்பருக்குள் மின் பற்றாக்குறையைப் பெருமளவிற்கு நிவர்த்தி செய்ய முடியும். இந்த வகையில் தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஐந்து ஆண்டுகளில் இருந்த பற்றாக்குறையை ஓராண்டில் நிவர்த்தி செய்வது என்பது பேராசை என்றாலும் இயலாது என்றாலும் மின்தேவை கருதி அதை முடித்தே தீர வேண்டும் என்ற நோக்கத்தில் அரசின் முடிவை பாராட்டுகிறோம்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின் திட்டங்கள் மற்றும் ஏற்கெனவே பணிகள் நடைபெற்று வரும் மின் திட்டங்கள் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் செயல்பாட்டிற்கு வரவேண்டுமென்றால் ஏற்கெனவே இருந்த அரசு அந்தத் திட்டங்களில் செய்த முறைகேடுகள் கமிஷன்கள் ஆகியவற்றை விசாரிக்க வேண்டும். அதை செய்ய வேண்டியவர்கள் முறையாக செய்வதோடு கண்காணிப்பு ஏற்பாடும் தேவைப்படுகிறது. இப்படி செய்தால், 2012 டிசம்பரில் நாம் வைத்திருக்கக் கூடிய இலக்கை அடைய முடியும். இதற்கு மின்சாரத்துறை அமைச்சர் தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின்பற்றாக்குறைதான் கடந்த கால ஆட்சியாளர்களின் பல தோல்விகளில் மிகப்பெரிய தோல்வியாக அமைந்திருந்தது. திமுக அரசும், அக்கட்சி மிகப்பெரிய தோல்வியை சந்திக்க இதுதான் பிரதான பிரச்சனையாக இருந்தது. தேர்தலுக்கு திருமங்கலம் ஃபார்முலா ஃபார்முலாவை கண்டுபிடித்து வைத்தவர்கள் மின் பற்றாக்குறையைப்போக்க ஒரு ஃபார்முலாவை கண்டுபிடித்திருந்தால் தமிழ்நாடு நன்றாக இருந்திருக்கும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் இன்று 45 ஆயிரம் கோடி ரூபாய் கடனில் உள்ளது. நமக்கு ஏராளமான செலவுகளும் உள்ளன. அதில் முக்கிய செலவாக ஆண்டுதோறும் கடனுக்கு வட்டியாக 4,800 கோடி ரூபாய் செலுத்துகிறோம். எனவே, இந்த கடனை குறைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

கூடுதலாக மின்சாரம் வாங்கும்போது அதிகமாக விலை கொடுத்து வாங்க மாட்டோம் என்று மின்சாரத்துறை அமைச்சர் பேரவையில் தாக்கல் செய்துள்ள தனது துறையின் மானியக் கோரிக்கையில் தெரிவித்திருக்கிறார். கொள்முதல் செய்வதை குறைப்பது மட்டுமல்லாமல் கூடுதலாக விலை கொடுத்து தனியாரிடமிருந்து மின்சாரத்தை ஏன் வாங்குகிறோம் என்ற கேள்வி நம்முன் எழுந்துள்ளது.

***அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் (குறுக்கீடு):*** கடந்த திமுக ஆட்சியில் மின்வாரியத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்புக்கு அவர்கள் கையாண்ட மோசமான நிர்வாக முறையே காரணமாகும். மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதில் வெளிப்படையான கொள்கையை அவர்கள் கையாள மறுத்ததோடு கூடுதல் விலை கொடுத்து தனியாரிடமிருந்து மின்சாரத்தையும் வாங்கினார்கள். வாரியத்தில் ஏற்பட்ட இழப்பிற்கு இதுவும் ஒரு காரணம். அதிமுக அரசு பொறுப்பேற்றவுடன் சொந்த மின் உற்பத்தியை பெருக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதில் முன்னுரிமை அளித்திருக்கிறோம். தற்போது தனியாரிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் 85 காசுகள் கொடுத்து வாங்குகிறோம். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் ஐந்தாண்டு காலத்தில் சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 காசு கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். பொதுவாக தனியாரிடமிருந்து வாங்கப்படும் மின்சாரத்தின் விலை சந்தையின் ஏற்ற இறக்கத்தைப் பொருத்து அமையும். அப்படியே விலை உயர்ந்தாலும் அதிகபட்சம் 4 ரூபாய் 50 காசுக்கு மேல் உயர வாய்ப்பே இல்லை. இதனால், தமிழக அரசு மின்கொள்முதலில் மட்டும் பல ஆயிரம் கோடி ரூபாயை சேமிக்கும்.

***அ. சவுந்தரராசன்:*** கடந்த ஆட்சியாளர்கள் தனியாரிடமிருந்து ஒரு யூனிட் மின்சாரத்தை 12 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டிருந்தனர் என்பதுதான் துரதிஷ்டவசமான விஷயம். மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார் மின்நிலையத்தினர் நமது கட்டமைப்பைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால், கட்டணங்கள் அனைத்தும் அவர்களுக்கு சாதகமாகவே இருக்கின்றன.

***அமைச்சர் விஸ்வநாதன் (குறுக்கீடு):*** தனியார் மின் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான விலையை நாம் நிர்ணயம் செய்யவில்லை. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் அதனை நிர்ணயிக்கிறது.

***அ.சவுந்தரராசன்:*** ஒழுங்குமுறை ஆணையம் என்பதே மிகப்பெரிய சிக்கல் நிறைந்தது. அதைப்பற்றியும் 2006ம் ஆண்டு மின்சார சட்டத்தைப் பற்றியும் தனியாக விவாதிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.